1987 நவம்பர் 13]

ஆதி திராவிட நலத்துறை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலை பள்ளியாக உயர்த்துதல்.

114—(*வினா எண் 13850)—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, சிங்கானூரில் உள்ள ஆதி திராவிடர் நலத்துறை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த கல்வியாண்டில் துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இந்த உயர்நிலைப் பள்ளியை நடப்புக் கல்வியாண்டில் (1987–88) மேல் நிலைப் பள்ளியாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினை.

மாநிலங்களவையில் தெரிவித்த கருத்து பற்றி முதலமைச்சரின் அறிக்கை.

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு முதலமைச்சராக இருக்கின்ற, நமது முதலமைச்சர் வேறு கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர்கள் எனக்கும் முதலமைச்சர், எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் முதலமைச்சர், ஒட்டுமொத்த தமிழகத்திற்கும் முதலமைச்சர். அதே போல, தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்கள், எந்த கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர்கள் இந்த அவைக்கு உரியவர்கள், நாட்டிற்கு உரியவர்கள், நம்மவர்கள். நேற்றைக்கு முந்தா நாள் குறிப்பு ஒன்றை நான் வெளியிலே போகும்போது பத்திரிகை நிருபர்கள் எனக்குத் தந்தார்கள். அந்த குறிப்பில், மாநிலங்களவையில் இந்த அவையினாலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர்..

[1987 நவம்பர் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அனுமதிக்க முடியாது. மாநிலங்கள் அவையில் பேசினதைப் பற்றி இங்கே பேசமுடியாது. இங்கே அந்தக் குறிப்பு வராது. (குறுக்கீடு) அதற்கும் இதற்கும் சம்பந்தப்படுத்துவது முறையல்ல. (குறுக்கீடு) 'பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது.

திரு. கி. மனோகரன் : பத்திரிகை நிருபர்களிடமிருந்து பெறுவதை விட இங்கே பெறுவது நல்லதல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிக்கையை எங்கேயும் கொடுக்கலாம். It is not relating to the Proceedings of the House.

நான் ஒன்றும் டிஸ்கஸ் பண்ணவில்லையே (குறுக்கீடு) அந்த பிரச்சினை இங்கே வேண்டாம். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அது பாயிண்ட் ஆப் ஆர்டரிலே எழவும் செய்யாது.

திரு. கி. மனோகரன் : வேண்டாம், வேண்டாம் என்று சொல்கின்றீர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. மாநிலங்கள் அவையிலே பேசினதைப் பற்றி இங்கே பேசமுடியாது.

திரு. கி. மனோகரன் : எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் மாநிலங்கள் அவையில் பேசிய பேச்சுக்கும் எங்கள் பேச்சுக்கும் சம்பந்தம் இல்லை என்று..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கட்சி விவகாரம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்சித் தலைவர் என்ற முறையில் அதைச் சொல்லியிருக்கின்றார்கள். 'சீப் மினிஸ்டர்' என்ற முறையில்தான் தெரிவித்திருக்கின்றார்கள். (குறுக்கீடு) Cheif Minister is also General Secretary of the Party. அப்படியும் வருகிறது அல்லவா ?

திரு. கி. மனோகரன் : நான் முதலமைச்சர் என்றுதான் பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : He can control his M. Ps. and M.L. As. He has got that prorogative as the Leader of the Party.

திரு. கி. மனோகரன் : அந்த அறிக்கையை இந்த அவையிலே வைத்திருக்கலாம்.

1987 நவம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பாயிண்ட் ஆப் ஆர்டரிலே வரமுடியாது. அதற்கு இங்கே யாரும் பதில் சொல்ல முடியாது. (குறுக்கீடு) அது பாயிண்ட் ஆப் ஆர்டரிலே எழாது எப்படிப் பதில் சொல்வது ?

திரு. கி. மனோகரன் : நான் இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும்.

திரு. கி. மனோகரன் : போர் நிறுத்தக் கொள்கையிலே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த விவாதம் இப்போது இங்கே வேண்டாம். பி.ஏ.சி.யில் பேசுவோம் வாருங்கள். அங்கே வாருங்கள். பாயிண்ட் ஆப் ஆர்டரில் இவ்வளவு பெரிய விவகாரம் விவாதிக்க முடியாது. பதில் சொல்ல முடியாது. பாயிண்ட் ஆப் ஆர்டரில் அது ஒன்றும் வராது.

திரு. கி. மனோகரன் : எப்படி பிசினஸ் வைப்பது ? என்னென்ன வைப்பது என்பது தான் அங்கே வரும். பிரச்சினையைப் பற்றி பேசும் இடம் இது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாம் அஜெண்டாவில் ஒதுக்கிய பிறகுதான் பேச முடியும். இப்போது பேசமுடியாது. என்னென்ன விவாதிக்கலாம் என்று நாம் அங்கே முடிவெடுத்து பின்னர் இங்கே வந்து விவாதிக்கலாம். (குறுக்கீடு) அது பாயிண்ட் ஆப் ஆர்டரில் எழ முடியாது. (குறுக்கீடு) ராஜ்ய சபாவில் நடந்தது பற்றி இந்த ஹவுசில் பதில் சொல்வதற்கு யாரும் இல்லையே. (குறுக்கீடு) இது அதில் வராது. (குறுக்கீடு) It is not related to the proceedings of the House. As the Leader of the Party and as a Chief Minister he has issued a statement. You cannot raise it here under any of the Rules (குறுக்கீடு) நீங்கள் தான் படிக்க வேண்டும். (குறுக்கீடு) பதில் நான் எப்படிச் சொல்வது ? (குறுக்கீடு) There is no point of order. It cannot be raised as a point of information also.

THIRU A. RAHMANKHAN : Contempt of the House?

Mr. SPEAKER : It dose not relate to the proceedings of the House. (குறுக்கீடு) எனக்கு உங்கள் பிரச்சினை புரிகிறது. உட்காருங்கள். அடுத்து, அரசினர் தீர்மானம், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அது பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது. (குறுக்கீடு).

நீங்கள் என்ன கிளப்பப் போகிறீர்கள் என்று சொல்லவில்லையே (குறுக்கீடு) அது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. என்னுடைய அறையில் வந்து கேளுங்கள் (குறுக்கீடு) விதியைப் படித்து தயவுசெய்து சொல்லுங்கள். (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது அவையின் நடவடிக்கையிலிருந்து எழ வேண்டும். அவை நடவடிக்கை எதுவும் விவாதிக்கப்படவில்லையே. உட்காருங்கள் (குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வாருங்கள். நான் அதற்கு வழி சொல்கிறேன்.

3. அரசினர் தீர்மானம்.

விதி 55 (6)-ஐத் தளர்த்துதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''ஒரே நாளில் இரண்டிற்கு மேற்பட்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்களைக் கவன ஈர்ப்பாகக் கொண்டு வரக்கூடாது என்றுள்ள தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 55 (6)-ஐ இன்றும் மற்றும் இக்கூட்டத் தொடர் முழுவதும் தளர்த்த வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

4. கவன ஈர்ப்பு.

(அ) சென்னை வேளச்சேரி பகுதியிலுள்ள சாவடி இடத்தை கிராம நிர்வாக அலுவலர் சட்டத்திற்குப் புறம்பாக விற்றது குறித்து.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை வேளச்சேரிப் பகுதியில் அரசுக்குச் சொந்தமான கிராம சாவடி இடத்தை கிராம நிர்வாக அலுவலர் அரசுக்கு தெரியாமல் சட்டத்திற்கு புறம்பாக விற்பனை செய்ததால், ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.